00196

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்ட கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சி திட்டம்
மட்டம் 4
தொடர்மதிப்பீட்டு பரீட்சை 1 – 2022/2023
LLU4708 - அரசியலமைப்பு சட்டம் II
காலம் - 1 மணித்தியாலம்

திகதி - 25 செப்டம்பர் 2023 நேரம்- மு.ப 11.30 – பி.ப 12.30

**பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒரு (01) வினாவுக்கு மட்டும் விடை எழுதவும்**

தெளிவற்ற எழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(1) "அனைத்து அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகள் ஆனால் அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகள் அல்ல"

இந்த கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையில் அரசியலமைபுகளுக்குள் உள்ள கட்டமைப்புக்குள் மனித உரிமைகளின் அரசியலமைப்பு பாதுகாப்புகள் எவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பதட்கு அவதானம் வழங்கி இக்கூற்றினை ஆராய்க

(20 புள்ளிகள்)

(2) (அ) பனானா குடியரசு என்பது X மதக் குழுவைச் சேர்ந்த பெரும்பான்மையாக கொண்ட நாடு. மதகுருமார்கள் மத நெறிமுறைகளுக்கு முரணாக நடந்து கொள்வதனால் அவர்கள் மீது உருவான புகார்களின் அடிப்படையில் மத குருமாரின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்த வேண்டும் என்று பனானா குடியரசு அரசாங்கம் கருதுகிறது. அதன்படி, மதகுருமார்களின் ஒழுக்கத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் கொண்ட அமைப்பொன்றை நிறுவுவதற்கான மசோதாவை அரசாங்கம் முன்மொழிகிறது. மசோதா பின்வரும் உறுப்புரைகளை கொண்டுள்ளது.

பிரிவு:

பிரிவு 2 (1): "தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு மதகுருமார்களுக்கு தடைசெய்யப்பட்ட செயல்பாடுகளை அடையாளம் காணும் விதிமுறைகளை உருவாக்கும். இந்த விதிமுறைகளுக்கு முரண்பாடாக செயல்படும் எந்த மதகுருமாரும் விதிமுறைகளை மீறியதாகக் மீறியதாக கருதப்பட்டு முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால மதகுருமார் என்ற தகுதியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள்.

X மதக் குழுவின் தலைமைத் துறவி இந்த மசோதாவை தனது சமூகத்தின் சமூக அடிப்படை உரிமை மீறல் என்று கருதுகிறார். அவருக்கு ஏதேனும் நிவாரணம் கிடைக்குமா? தலைமை துறவிக்கு ஆலோசனை கூறுங்கள்

(10 புள்ளிகள்)

(ஆ) பனானா குடியரசின் மத விவகார அமைச்சர் கட்டாயப்படுத்தி, வஞ்சகமாக மற்றும் பொருள் பலன்களை வழங்குதல் மூலம் மக்களை ஏனைய மதங்களுக்கு மதமாற்றம் செய்வதை தடுக்கும் புதிய சட்டத்தை உருவாக்குதல் தொடர்பாக அமைச்சரவை முன்மொழிவு ஒன்றை முன்வைக்கிறார். இம் முன்மொழிவு "பொருள் பலன்களை": '...உணவு, வீடு, வேலை, மருந்து அல்லது பிற வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான நன்மைகளை வழங்குதல்" என வரையறுக்கிறது

தங்கள் பணியின் ஒரு பகுதியாக தொண்டு செய்கிற சிறுபான்மை மதக் குழுவான Y இன் உறுப்பினர்கள். இந்த முன்மொழிவு அவர்களின் மத சுதந்திரத்தை தேவையற்ற முறையில் கட்டுப்படுத்துகிறது என கருதுகிறது. Y இன் சமூகத் தலைவர்கள் இந்த முன்மொழிவு மசோதாவாக முன் வைக்கப்பட்டால் இதனை நீதிமன்றத்தின் முன் சவாலுக்குட்படுத்த முடியுமா? என்பது தொடர்பில் உமது ஆலோசனையைக் நாடுகிறார்கள்

(10 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

**மேலே உள்ள இரண்டு சூழ்நிலைகளிலும், பனானா குடியரசின் அரசியலமைப்பு இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பை ஒத்தது என்று கருதி உமது விடைகள் பொருத்தமான சட்ட ஆதாரங்களால் ஆதரிக்கப்பட வேண்டும்**